RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 130 | மே.17 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பெட்ரோல், டீசல் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்: முதல்வர் விஜய், அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை: மே.17-

பெட்ரோல், டீசல் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வர் விஜய் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளில் கூறியிருப்பதாவது:

முதல்வர் விஜய்: 5 மாநிலங்களில் தேர்தல் முடிந்தபின் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தியிருப்பது ஏற்புடையதல்ல. இந்த விலை உயர்வு இருசக்கர வாகனங்கள் மற்றும் பேருந்துகளை பயன்படுத்தும் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் மாத வருவாயில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

அன்றாடப் பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாக அமைவதுடன் ஏழை, எளிய மக்களின் வாங்கும் திறனையும் பாதிக்கும். குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்திச் செலவும் அதிகரிப்பதால், சந்தையிலும், ஏற்றுமதியிலும் மந்தநிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மற்றும் குறு, சிறு தொழில் நிறுவனங்களைப் பாதிக்கும் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும்

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தவெக அரசு மாற்றம் வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாக வைத்து செயல்படுகிறதென்று சொல்கிறார்கள். பெட்ரோலுக்கும், டீசலுக்கும், எரிவாயு சிலிண்டருக்கும் உள்ள விற்பனை வரியை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.




தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை: ஏற்கெனவே அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த எரிபொருள் விலை உயர்வு மேலும் பணவீக்கத்தை அதிகரித்து, நடுத்தர மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம்: பெட்ரோல், டீசல் விலை உயர்வு மக்களின் அன்றாட வாழ்க்கையில் சங்கிலித் தொடர் போன்ற பாதிப்புகளை உருவாக்கும். புயலில் சிக்கிய படகு போல குடும்பங்கள் தள்ளாடும் நிலை ஏற்படும். மத்திய அரசு இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி: இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை ஏற்கெனவே அதிகமாக உள்ளன. இத்தகைய சூழலில் கச்சா எண்ணெய் விலை உயர்வின் தாக்கத்தை இயன்றவரை எண்ணெய் நிறுவனங்களும், மத்திய அரசும் தாங்கிக் கொண்டு விலை உயர்வை தவிர்த்திருக்க வேண்டும்.

விசிக தலைவர் திருமாவளவன்: பெட்ரோல்டீசல் விலையை லிட்டருக்கு ரூ.3 என உயர்த்தியிருப்பதன் மூலம் பாஜக அரசு எளிய மக்களின் அடிவயிற்றில் கை வைத்துள்ளது. இதனால் மிகவும் பாதிக்கப்படப் போவது விளிம்புநிலையைச் சார்ந்த ஏழைஎளிய உழைக்கும் மக்கள்தான்.

அமமுக பொதுச்செயலாளார் டிடிவி.தினகரன், தவக தலைவர் வேல்முருகன், ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்க தலைவர் அன்பழகன், உள்ளிட்டோரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

## தமிழக முதல்வருக்கு பொதுமக்கள் கோரிக்கை

### தனியார் பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டணங்களை ஒழுங்குபடுத்த வேண்டுகோள்

சென்னை, மே.17-

தமிழகத்தில் தனியார் பள்ளிகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அதிக கட்டணங்கள் வசூலிக்கப்படுவது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

தனியார் பள்ளிகளில் மாணவர்களை சேர்த்து கல்வி கற்பிப்பதற்காக அதிக அளவில் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதால், பெற்றோர்கள் கடும் பொருளாதார சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது. ஆண்டுதோறும் உயர்ந்து வரும் பள்ளிக் கட்டணங்கள் காரணமாக, பல குடும்பங்கள் குழந்தைகளின் கல்வியை தொடர கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.



அதேபோல், தனியார் மருத்துவமனைகளிலும் அதிக கட்டணங்கள் வசூலிக்கப்படுவதால், சாதாரண மக்களுக்கு மருத்துவ சேவைகளை பெறுவது கடினமாகி வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால், தனியார் பள்ளி மற்றும் மருத்துவமனைகளின் கட்டணங்களை அரசு ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

ஏழை மற்றும் எளிய மக்களின் குழந்தைகளும் தரமான கல்வி பெற வேண்டும். கான்வென்ட் போன்ற உயர்தர பள்ளிகளில் படிக்கும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றும், அனைத்து மக்களுக்கும் தரமான மருத்துவ சேவைகள் எளிதில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வரும் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பாகவே தனியார் பள்ளிகளின் கட்டணங்களை வரையறுக்கும் வகையில் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட வேண்டும் என்பது பெற்றோர்களின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம்: சுற்றுலா பயணிகள் செல்ல தடை

திண்டுக்கல்: மே.17-

கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பதால் சனிக்கிழமை (நேற்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது. இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும். பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத்தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்க்கலாம்.



இந்நிலையில் (மே 16) காலை முதல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதற்கு சனிக்கிழமை (இன்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது. அதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறும் போது,புலிகள் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். புலிகள் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்றதும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்றனர்.

## நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி திக, திமுக, விசிக, இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை: மே.17-

நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி இன்று தமிழகம் முழுவதும் திராவிடர் கழகம், திமுக, விசிக, இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின.

நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி இன்று மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்துக்கு திராவிடர் கழகம் அழைப்பு விடுத்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு திமுக, விசிக, இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

நேற்று சென்னை எழும்பூரில் திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விசிக தலைவர் தொல்.திருமாவளவன், திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ஜி.செல்வா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.




இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய திக தலைவர் கி.வீரமணி, "நீட் தேர்வில் மிகப் பெரிய ஊழல் நடக்கிறது. நீட் தேர்வை ஒழிக்காமல் ஊழலற்ற அரசு என பாஜக எப்படி சொல்ல முடியும். அரசியல் சட்டத்துக்கு மிகவும் விரோதமானதுதான் நீட் தேர்வு. நீட் தேர்வே ஒரு மோசடிதான், சட்ட விரோதம் தான். நீட் விவகாரத்தில் மாநில உரிமை பறிக்கப்பட்டுள்ளது. எனவே, நீட் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்" என்றார்.

விசிக தலைவர் திருமாவளவன், "நீட் தேர்வின் காரணமாக 12ம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு மதிப்பில்லாமல் ஆகிவிட்டது. இப்போது நீட் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் அதிகமாகிவிட்டன. இதனால் நீட் தேர்வு வணிகமயமாக மாறிவிட்டது. நீட் தேர்வின் மூலம் எளிய மக்கள் மருத்துவ கல்வி பெற முடியாது. மருத்துவ படிப்புக்கு நீட் பயிற்சி நிறுவனங்களை நாடினால் போதும் என, வசதியுள்ளவர்களுக்கான படிப்பாக அதனை மாற்றி விட்டார்கள்.

நீட் தேர்வால் தனியார் மருத்துவ கல்வி நிறுவனங்களின் கொள்ளையை தடுக்க முடியவில்லை. நீட் தேர்வு அரசியலமைப்பு சட்டத்துக்கே எதிரானது. தமிழக அரசு நீட் தேர்வு வேண்டாம் என சட்ட மசோதாவை நிறைவேற்றிய பின்னரும் மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. இப்போது நீட் வினாத்தாள் கசிந்ததை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஒப்புக்கொண்டுள்ளார்" என்று கூறினார்.

மதுரை, திண்டுக்கல், சேலம், தஞ்சாவூர், திண்டிவனம், விழுப்புரம் உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் இன்று நீட் தேர்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## விபத்தில் கணவர், மகளை பறிகொடுத்த பெண்ணுக்கு ரூ.1.60 கோடி இழப்பீடு: இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்க உத்தரவு

சென்னை: மே.17-

இருங்காட்டுக்கோட்டை சிப்காட் அருகே கார் மீது லாரி மோதி விபத்துக்கு உள்ளானதில் கணவர் மற்றும் மருத்துவரான மகளை பறிகொடுத்த பெண்ணுக்கு ரூ. 1.60 கோடியை இழப்பீடாக வழங்க தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை வில்லிவாக்கம் திருமலை நகர் பகுதியில் மருந்தகம் நடத்தி வந்தவர் பாஸ்கர் (61). இவரது மனைவி ஜோதிகா (49), சொந்தமாக பியூட்டி பார்லர் நடத்தி வருகிறார். மகள் ஷோபிகா (26), தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வந்தார்.

மூவரும் குடும்பத்துடன் ஏலகிரி சென்று விட்டு கடந்த 2023 மே 14ம் தேதி சென்னைக்கு காரில் திரும்பிக் கொண்டிருந்தனர். காரை அஸ்வின்குமார் என்பவர் ஓட்டி வந்துள்ளார்.

அப்போது இரவு 9 மணியளவில் கார் பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் அருகே வந்து கொண்டிருந்தபோது சிப்காட்டில் இருந்து அதிவேகமாக நெடுஞ்சாலையில் புகுந்த சரக்கு லாரி, கார் மீது மோதியது.



இதில் படுகாயமடைந்த பாஸ்கரும், அவரது மகள் ஷோபிகாவும் உயிரிழந்தனர். ஜோதிகாவும், கார் ஓட்டுநரும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர். இந்நிலையில் இளம் மருத்துவரான தனது மகள் மற்றும் கணவரின் இறப்புக்கும், தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் ரூ.3 கோடி இழப்பீடு கோரி சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் ஜோதிகா தனித்தனியாக 3 வழக்குகளைத் தொடர்ந்தார்.

இந்த வழக்குகளை விசாரித்த சென்னை சிறு வழக்குகளுக்கான முதன்மை நீதிமன்ற நீதிபதி ஏ.நசீர் அகமது, 'இந்த விபத்து சரக்கு லாரி ஓட்டுநரின் கவனக் குறைவு, அலட்சியப் போக்கு மற்றும் அதிவேகத்தால் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்த பெண் மருத்துவர் தனியார் மருத்துவமனையில் ரூ. 1.14 லட்சம் ஊதியம் வாங்கி வந்துள்ளார். மருந்தகம் நடத்தி வந்த பாஸ்கர் மாதம் ரூ. 50 ஆயிரம் சம்பாதித்துள்ளார். காயமடைந்த மனுதாரரான ஜோதிகாவும் தன் பங்குக்கு ரூ. 20 ஆயிரம் வரை சம்பாதித்து வந்துள்ளார்.

இந்த விபத்துக்கு கார் ஓட்டுநரின் அதிவேகமே காரணம் என்ற சரக்கு லாரி காப்பீடு செய்யப்பட்ட தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வாதம் ஏற்புடையதல்ல. மனுதாரர் இந்த விபத்தில் தனது மகள் மற்றும் கணவரை பறிகொடுத்ததுடன் மட்டுமல்லாது அவரும் 34 சதவீதம் அளவுக்கு ஊனமடைந்துள்ளார்.

எனவே அவரது மகளின் இறப்புக்கு ரூ. 1 கோடியே 29 லட்சத்து 89 ஆயிரத்து 800, கணவரின் இறப்புக்கு ரூ. 17 லட்சத்து 24 ஆயிரம், மனுதாரருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு ரூ. 13 லட்சத்து 58 ஆயிரத்து 300 என மொத்தம் ரூ. 1 கோடியே 60 லட்சத்து 72 ஆயிரத்து 100ஐ தனியார் இன்சூரன்ஸ் நிறுவனம் 7.5 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும்' என உத்தரவிட்டுள்ளார்.

## குன்னூர் ஓட்டுப்பட்டரை பகுதியில் அரசு டாஸ்மார்க் மதுபான கடை அகற்ற பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை




குன்னூர் மே,17-

குன்னூர் தாலுகாவிற்கு உட்பட்ட ஓட்டுப்பட்டரை முன்று ரோடு பகுதியில் அருகில் அரசு டாஸ்மார்க் மதுபான கடை பொது மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் அருகே பல காலமாக இயங்கி வருகிறது .அரசு டாஸ்மார்க் மதுபான கடை இயங்கும் இடம் இரண்டு மாடிகள் உள்ளன. மேல் மாடியில் பொது மக்கள் வசித்து வருகின்றனர்.கீழ் பகுதியில் அரசு மதுபான கடை இயங்கி வருகிறது. அரசு டாஸ்மார்க் மதுபான கடையின் சிறிது துராத்தில் குன்னூர் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

மேலும் இதன் அருகே சிறிது தூரத்தில் மூன்று ரோடு பகுதியில் தான் பொது மக்கள் குன்னூர் செல்வதற்கு, பேருந்து பயணியர் நிழற்குடை உள்ளது.அரசு டாஸ்மார்க் மதுபான கடையால் இதனருகேகுடியிப்பு பகுதியில் வசிக்கும் பொது மக்கள் மன உளைச்சலால் பகுதிக்கப்படும் நிலை. மேலும் சாலையோரம் இருப்பதால் நடந்து செல்லும் பொது மக்கள் மன உளைச்சல் பாதிக்கப்படும் நிலை.இந்த குடியிருப்பு பகுதியில் வசிக்கும் பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் சாலையில் நடந்து செல்லும் பொதுமக்கள் மன உளைச்சலுடன் செல்லாமல் இருக்கவும் மேற்கண்ட காரணங்களை மையமாக வைத்து பொது மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் அருகில் இயங்கி வரும் அரசு டாஸ்மார்க் மதுபான கடையினை அகற்ற தமிழக முதலமைச்சரும், நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவரும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே, பொது மக்கள், மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கை.

## நுகர்வோர் காலாண்டு கூட்டங்களை முறையாக நடத்த கோரிக்கை

நீலகிரி மே,17-

நீலகிரி மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அனைத்து காலாண்டு கூட்டங்களையும் அரசாணை எண்.389ன் படி தொடர்ந்து மற்றும் முறையாக நடத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் கோரிக்கை விடுத்துள்ளது.இது தொடர்பாக கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய பொதுச்செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், சென்னை உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர், நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடத்தை விதிகள் அமலாகியதால் முறையான வழக்கமான நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டது அதன் அடிப்படையில் நுகர்வோர் கூட்டங்களும் நடத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. தற்போது தேர்தல் நிறைவடைந்து தேர்தல் நடைமுறைகள் விலக்கிகொள்ளபட்டு அரசு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குறைதீர் கூட்டங்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த கூட்டங்கள் வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை எண்.389, நாள் 28.12.1988 ன் விதிமுறைகளின்படி நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அனைத்து கூட்டங்களும் மாவட்ட அளவில் முறையாக நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைப்படி,துறை ரீதியான துறை தலைமை அலுவலர்கள் தலைமையில் நுகர்வோர் காலாண்டு கூட்டங்கள், மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து துறைகள் அடங்கிய மாவட்ட நுகர்வோர் காலாண்டு கூட்டம், உணவு பாதுகாப்பு துறை வழிகாட்டுதல் குழு கூட்டம், பொது விநியோகத் திட்ட கண்காணிப்பு குழு கூட்டம், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழு கூட்டம், மாவட்ட சுகாதார அலுவலர் மூலம் கூட்டபடவேண்டிய அயோடின் உப்பு கண்காணிப்பு குழு கூட்டம் உள்ளிட்ட நுகர்வோர் அமைப்புகள் பங்கேற்கும் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் அமைப்புகளை கலந்து கொள்ள அழைத்து, அவர்களின் கருத்துகள், புகார்கள் மற்றும் பரிந்துரைகளை பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நீலகிரி மாவட்டத்தில் அரசாணை முழுமையாக செயல்படுத்தப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு வலுப்பெற மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து நுகர்வோர் காலாண்டு கூட்டங்கள் நடத்த வேண்டும் எனவும், அனைத்து கூட்டங்களிலும் நுகர்வோர் அமைப்புகள் ஒத்துழைக்க தயாராக இருப்பதாகவும் சிவசுப்பிரமணியம் அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.



## கிருஷ்ணகிரி எம்.எல்.ஏ. முகுந்த் பாண்டியனை சந்தித்து காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் வாழ்த்து

கிருஷ்ணகிரி,மே,17-

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிட்டு சுமார் 18 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியனை, காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் எல். சுப்பிரமணியன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

சட்டமன்ற கூட்டத் தொடர் பணிகளை முடித்து சென்னையிலிருந்து கிருஷ்ணகிரி திரும்பிய முகுந்த் பாண்டியனை, கிருஷ்ணகிரி ஐக்கப்பன் நகரில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

அப்போது மாவட்ட மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள் பொதுமக்களுக்கு விரைவாக சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்ட அவர், முகுந்த் பாண்டியனுக்கு பொன்னாடை அணிவித்து தனது வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்தார்.




## ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில்சிறுவர், சிறுமியர்களுக்கு நடந்த கோடைக்கால பயிற்சியில் பங்கேற்ற97 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்

கிருஷ்ணகிரி, மே 17-

கிருஷ்ணகிரியில் ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், சிறுவர், சிறுமியருக்கு நடந்த கோடைக்கால பயிற்சியில் பங்கேற்ற 97 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறுவர்களின் கலை ஆர்வத்தை தூண்டும் வகையில், ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், சிறுவர், சிறுமியர்க்கு பகுதி நேர கலைப்பயிற்சி அளிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் உள்ள ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில், கோடைக்கால கலைப்பயிற்சி முகாம் கடந்த 6ம் தேதி துவங்கி நேற்று வரை நடந்தது. இதில், 5 வயது முதல், 16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர், பரத நாட்டியத்தில் 24 பேர், குரலிசையில் 13 பேர், யோகாவில் 20 பேர், ஓவியம் வரைவதில் 40 பேர் என மொத்தம், 97 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இசைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரிவேணி தலைமையில், பல்வேறு ஆசிரியர்கள் இம்மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியின் நிறைவு நாள் விழா நேற்று நடந்தது. இதில் ஜவகர் சிறுவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர் ஞானசக்தி, வாழ்த்துரை வழங்கி, பயிற்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். மேலும், கோடைகால விடுமுறை முடிந்த பின்னர், பள்ளி தொடங்கியவுடன் சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் வருடாந்திர கலைப்பயிற்சி வகுப்பு தொடங்கும் என்றும், இதில் 5 முதல் 16 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவ, மாணவிகளும் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் விபரங்களுக்கு, 9943351775 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

## ஆக்சிஜன் பற்றாக்குறையால் ஏரியில் செத்து மிதந்த 20 டன் மீன்கள்

### ரூ.20 லட்சத்திற்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டதாக மீன் குத்தகைதாரர் வேதனை



கிருஷ்ணகிரி, மே 17-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட குண்டலபட்டி ஊராட்சியில், கார்த்திகேயன் தியேட்டர் அருகே அமைந்துள்ள எல்லு குட்டை ஏரியில் பருவநிலை மாற்றம் மற்றும் ஆக்சிஜன் பற்றாக்குறை காரணமாக ஆயிரக்கணக்கான மீன்கள் செத்து மிதந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.இந்த ஏரியை குத்தகை எடுத்து மீன் வளர்ப்பு செய்து வந்த ரங்கசாமி என்பவர் கூறுகையில், கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவியதுடன், நீர்மட்டமும் குறைந்ததால் ஏரியில் ஆக்சிஜன் அளவு மிகவும் குறைந்துள்ளது. இதன் காரணமாக வளர்ப்பு செய்யப்பட்ட மீன்கள் திடீரென செத்து மிதக்க தொடங்கியதாக தெரிவித்தார்.ஏரியின் பல பகுதிகளில் மீன்கள் கூட்டமாக செத்து மிதந்ததால் துர்நாற்றம் வீசுவதோடு, அப்பகுதி மக்களும் கடும் அவதியடைந்துள்ளனர். சுமார் 20 டன்னுக்கும் மேற்பட்ட மீன்கள் உயிரிழந்துள்ளதாகவும், இதனால் ரூ.20 லட்சத்திற்கும் அதிகமான பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ரங்கசாமி வேதனை தெரிவித்தார்.மேலும், மீன்களை வளர்ப்பதற்காக கடன் பெற்று முதலீடு செய்திருந்ததாகவும், தற்போது ஏற்பட்ட இழப்பால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் கூறினார். மாவட்ட நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்தை ஆய்வு செய்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் சென்ற வாரம் இதே போல் நெரிமேடு தேசிய நெடுஞ்சாலை அருகே உள்ள ஒரு ஏரியிலும் இதே போல் மீன்கள் அதிக அளவு செத்து நீரில் மிதந்ததாக தகவல்.இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஏரியை பார்வையிட்டு சென்றனர். சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 5 நாள் நடந்த சுகப்பிரசவத்தில் உ.பி. பெண்ணுக்கு 4 குழந்தை

மொராதாபாத்:மே,17-

உத்தரபிரதேச மாநிலம் சம்பல் மாவட்டம் ஓவரி கிராமத்தைச் சேர்ந்தவர் அமீனா. இவர் பிரசவத்துக்காக லோதிப்பூரில் உள்ள தீர்த்தங்கர் மகாவீர் பல்கலைக்கழக மருத்துவமனையில் கடந்த 9ம் தேதி சேர்க்கப்பட்டார். கர்ப்ப காலத்தின்போது அவருக்கு ஸ்கேன் செய்து பார்த்ததில் அவரது வயிற்றில் 4 குழந்தைகள் இருப்பது தெரியவந்தது. அதனால் மருத்துவர்கள் அதிக எச்சரிக்கையுடன் அவருக்கு பிரசவம் பார்த்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் நாள் இரவே அவருக்கு முதல் குழந்தை சுகப்பிரசவத்தில் பிறந்தது.

அமீனாவுக்கு உடல்நிலை பாதிப்படைந்து இருந்ததால் அவருக்கு சிசேரியன் சிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து கண்காணிப்பில் வைக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த 14ம் தேதி மேலும் 3 குழந்தைகளை சுகப்பிரசவத்தில் அவர் பெற்றெடுத்தார். அதாவது 5 நாட்களாக நடந்த சுகப்பிரசவத்தில் 4 குழந்தைகளை அவர் பெற்றெடுத்தார். தற்போது தாயும், 4 குழந்தைகளும் நலமாக உள்ளனர். இதில் 2 குழந்தைகள் ஆண், 2 குழந்தைகள் பெண்.இதுகுறித்து அமீனாவுக்கு பிரசவம் பார்த்த மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர் ஷுப்ரா அகர்வால் கூறும்போது, ‘‘இந்த மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் சுகப்பிரசவத்தில் பிறந்தது இதுவே முதல்முறை. அதிக ரிஸ்க் இருந்தபோதும் அவரை அதிக கவனத்துடன் சிகிச்சை அளித்து குழந்தைகளை சுகப்பிரசவத்திலேயே பெறச் செய்தோம். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 4 குழந்தைகளும் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளன’’ என்றார்.

## நட்சத்திர ஓட்டல்களில் ‘கள்’ விற்பனை செய்ய திட்டம்: தெலங்கானா அமைச்சர் தகவல்



‘கள்’, நீரா (பதநீர்) போன்றவற்றின் விற்பனை ஊக்குவிக்கப்படும். இதற்கான தீவிர முயற்சியில் அரசு உள்ளது. தோட்டக்கலை பண்ணைகளில் கூட ஈச்சம், பனை கன்றுகள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஹைதராபாத்:மே,17-

ஹைதராபாத்தில் உள்ள நட்சத்திர ஓட்டல்களில் ‘கள்’ விற்க நடவடிக்கை எடுப்போம் என தெலங்கானா மாநில அமைச்சர் பொன்னம் பிரபாகர் அறிவித்துள்ளார்.தெலங்கானா மாநில போக்குவரத்து மற்றும் பிசி நலச்சங்க துறை அமைச்சர் பொன்னம் பிரபாகர் ஹைதராபாத்தில் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது: தெலங்கானா கலாச்சாரத்தை வெளி உலகிற்கு தெரியப்படுத்தும் வகையில், இனி ஹைதராபாத்தில் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்களில் கூட ‘கள்’, நீரா போன்றவை விற்க நடவடிக்கை எடுக்கப்படும். கள் இறக்கும் கூலி தொழிலாளர்கள் நலனுக்காக இந்த அரசு பல திட்டங்களை செயல்படுத்தும். வரும் 24ம் தேதி எக்ஸ்பீரியம் பார்க்கில் ‘பனை மேளா’ நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு 250 வகையிலான பனை மரங்கள் நடப்பட்டுள்ளன. அவைகளை மக்கள் கண்டு ரசிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்க அமெரிக்காவிடம் பணியும் அரசு

### காங்கிரஸ் கடும் தாக்கு

புதுடெல்லி:மே,17-

ஈரான் மற்றும் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எரிபொருள் வாங்க அமெரிக்கா அளித்த கெடு இன்றுடன் முடிகிறது. இதுதொடர்பாக காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:இந்தியாவின் இறையாண்மை மற்றும் எரிசக்திப் பாதுகாப்பை பிரதமர் மோடி தலைமையிலான அரசு சமரசம் செய்து கொண்டுள்ளது. நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்காவுக்கு முன் மோடி அரசு பணிந்து போனதற்கான விலையை, பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் கடுமையான தட்டுப்பாடுகள் வாயிலாக ஒட்டுமொத்த தேசமும் இன்று கொடுத்துக் கொண்டிருக்கிறது.முதலாவதாக, அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில், ரஷ்யாவிடமிருந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்குவதை பிரதமர் மோடி அரசு நிறுத்தியது. பின்னர், போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா, இந்தியாவுக்கு ஒரு மாதம் விலக்கு அளித்தது.இந்த விவகாரத்தில் நாட்டின் நலனை முன்னிறுத்தித் தானே ஒரு முடிவை எடுப்பதற்குப் பதிலாக, பிரதமர் மோடி அரசு அமெரிக்க அதிபர் ட்ரம்பிடம் பணிந்துபோய், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு மீண்டும் அனுமதி கோரி கெஞ்சிக் கொண்டிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.Efe

## பெரிய மாரியம்மன் கோயிலில்ரூ.3 லட்சம் மதிப்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஐம்பொன் சிலைக்கு ராகுகால பூஜை



கிருஷ்ணகிரி, மே 17:-

கிருஷ்ணகிரி பெரிய மாரியம்மன் கோயிலில் ரூ.3 லட்சம் மதிப்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஐம்பொன் சிலைக்கு ராகுகால பூஜை நடந்தது. கிருஷ்ணகிரி புதுப்பேட்டை பெரிய மாரியம்மன் கோயிலில் கடந்த வாரம் ரூ.3 லட்சம் மதிப்பிலான துர்க்கையம்மன் ஐம்பொன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த சிலைக்கு நேற்று ராகுகால பூஜை நடந்தது. இதையொட்டி, துர்க்கையம்மன் சிலைக்கு பால் ஊற்றி பக்தர்கள் அபிஷேகம் செய்தனர். தொடர்ந்து, சிலைக்கு அலங்காரம், சிறப்பு பூஜைகள் நடந்தது. பின்னர் துர்க்கையம்மன் உற்சவரை சுமந்து கோயில் பிரகாரத்தை சுற்றி வலம் வந்தனர். பெண்கள் பக்தி பாடல்களை பாடி நேர்த்திக் கடன் செலுத்தினர்.

இக்கோயிலில் வருகிற ஜூன் மாதம் 5ம் தேதி மாலை 5 மணிக்கு, தோஷங்களை நீங்கிடவும், மாங்கல்ய பாக்யம் கைக்கூடவும், மகிழ்ச்சி என்றும் நிலைத்திட, நாட்டிலும், வீட்டிலும் நிம்மதி, சந்தோஷம், உற்சவம் நிறைந்திட பெண்கள் குத்துவிளக்கு பூஜை செய்ய உள்ளனர். இதற்கு, 9 முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோயில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினருக்கு அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்கத்தினர் உற்சாக வரவேற்பு!

தேனி மே.17-

தேனிமாவட்டம் பெரியகுளம் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் மத்திய சங்கம் கார்த்திக் தலைமையில் அரசு போக்குவரத்துக் கழக தொழிற்சங்கத்தினர் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சபரி ஐங்கரனுக்கு ஏலக்காய் மாலை அணிவித்து மரியாதை செய்தும், மகுடம் சூட்டியும், பொன்னாடை போர்த்தியும் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து கிளை மேலாளர் சரவணக்குமார்



அவர் களை மரியாதை நிமித்த சந்தித்தனர். மாகபணிமனை அப்போதுயில் தொழிற்கூடம் வளாகப் பகுதியில் சிமெண்ட் தளம் மேற்கொள்ளவும், சுகாதார வளாகத்தை சீரமைத்திடவும், போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் ஊழியர்களின் பணிபாதுகாப்பிற்கு வழிவகை மேற்கொள்ளவும் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது கிளை நிர்வாகி ராஜ் கமல், போடி கிளை அலுவலக உதவியாளர் முத்துச்செல்வம் மற்றும் கழக போக்குவரத்துக் பணிமனை பணியாளர்கள்மற்றும் தொழிற்சங்கத்தினர் உடனிருந்தனர்.



# முன்னாள் புழல் ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

மாதவரம், மே.17-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி பெரியதெருவில் வசித்துவரும் புழல் ஒன்றிய முன்னாள் திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவிற்கு குடும்பத்தினர்கள் விளாங்காடுபாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாரதிசரவணன் உட்பட பெ.தஷ்ணாமூர்த்தி, பெ. செல்வகுமார். பெ.கௌதமன், பெ.பரிமளச்செல்வம், பெ.உதயகுமார், பெ.எழிலன், பெ.கபிலன் மற்றும் தனுஷ், ரோகேஷ் உள்ளிட்ட நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் ஊராட்சி பிரிதிநிதிகள் பலரும் திரளாக கலந்து கொண்டு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கேக்வெட்டி வாழ்த்தினர்.

# ஸ்ரீ சிவா வித்யாலயா அறக்கட்டளை தொடக்கம்சென்னை உயர்நீதிமன்ற காவல் துணை ஆணையர் கோ.ஹரிக்குமார் தொடக்கி வைத்தார்

வந்தவாசி,மே.17-

வந்தவாசி அருகே கல்விச் சேவைகளுக்காக, ஸ்ரீ சிவா வித்யாலயா அறக்கட்டளை தொடங்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம்,வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ராதே கிருஷ்ணன் மகாலில் கல்விச் சேவைகளுக்காக, ஸ்ரீ சிவா வித்யாலயா அறக்கட்டளை தொடங்கவிழா துரைசார்ஸ் ஐஏஎஸ் அகாடமி இயக்குநர் எம்.எம்.ஜே.துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது. இணை இயக்குநர் ஸ்ரீதரன் முன்னிலை வகித்தார். இணை இயக்குநர் அர்ச்சனா ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, சென்னை உயர்நீதிமன்ற



காவல் துணை ஆணையர் கோ.ஹரிக் குமார் குத்துவிளக்கேற்றி ஸ்ரீ சிவா வித்யாலயா அறக்கட்டளையைதொடக்கி வைத்தார்.தொடர்ந்துதுரைசார் ஐஏஎஸ் அகாடமி மற்றும் ஸ்ரீ சிவா வித்யாலயா அறக்கட்டளை இணைந்து நடத்தும் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு கையேடுகளை வழங்கினார். தூயநெஞ்ச மகளிர் மேல்நிலைப் பள்ளி மூத்த நிர்வாகி ஜோதிமேரி எப்.எஸ்.ஜே, தீக்க்ஷாஅறக்கட்டளை

நிறுவனர் மூவேந்தன் வாழ்த்துரைவழங்கினர். இந்த நிகழ்ச்சியில்,ஸ்ரீ சிவா வித் யாலயா அறக்கட்டளை கௌரவ தலைவர் மாணிக் சிவராஜ், வழக்கறிஞர் மூ.வசீகரன் மற்றும் ஆசிரியர்கள்,பயிற்றுநர்கள்,பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி திராவிடர் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, மே 17-

கிருஷ்ணகிரியில் நீட் நுழைவுத் தேர்வை முற்றிலுமாக ரத்து செய்ய வலியுறுத்தி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் கோ.திராவிடமணி தலைமை தாங்கினார். மாணவர் உரிமை, மாநில உரிமை மற்றும் அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மாவட்டச் செயலாளர் செ.பொன்முடி வரவேற்றார். மாவட்ட துணைத் தலைவர் வ.ஆறுமுகம், இளைஞரணி தலைவர் சீ.இராசேசன், மாணவரணி தலைவர் இர.அஜய்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இதில் விசிக மற்றும் திமுக நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள், தோழர்கள் திரளாக பங்கேற்று நீட் தேர்வுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். மாநில பகுத்தறிவாளர் கழக துணைப் பொதுச் செயலாளர் அண்ணா சரவணன் கண்டன உரையாற்றினார்.

# தேனி மாவட்டம்வீரபாண்டிஅருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், கலந்து கொண்டு திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து துவக்கி வைத்தார்

தேனி மே 17-

தேனி மாவட்டம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத்சிங், பாரம்பரிய உடை அணிந்து திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து துவக்கி வைத்தார்கள். தேனி மாவட்டத்தில் முக்கிய திருவிழாவாக ஆண்டுதோறும் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப்பெருந்திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருவிழா கடந்த 12.05.2026 அன்று வெகுவிமர்சையாக தொடங்கப்பட்டு, வருகின்ற 19.05.2026 வரை நடைபெறவுள்ளது. மேலும், இத்திருவிழாவில், பக்தர்கள் அம்மனை தரி







சித்துவிட்டுச் செல்லும் வரை பாதுகாப்புப் பணியில் ஆண், பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பக்தர்கள் கோவிலுக்கு சென்று வர இடையூறு ஏற்படாதவண்ணம் உள்ளே சென்று, வெளியே வருவதற்கு தனித்தனி வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் பக்தர்களின் பார்வைக்கு நன்கு தெரியும் வண்ணம் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டு, ஒலி பெருக்கியின் மூலம் பக்தர்களுக்கு தேவையான அறிவிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.இத்திருவிழாவில் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் விழாவினை இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாரம்பரிய உடை அணிந்து துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், பொதுமக்கள் பார்வைக்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்புப் புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பார்வையிட்டார்.இந்நிகழ்வில், தேனி பாராளுமன்ற உறுப்பினர். தங்கதமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்.சபரிஐங்கரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பேரூராட்சித்தலைவர்கள். கீதாசசி (வீரபாண்டி), மிதுன்சக்கரவர்த்தி (பழனிசெட்டிபட்டி), கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மகேஷ், உதவி ஆணையர் (இந்துசமய அறநிலையத்துறை) ஜெயதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேனி) .சதீஸ்குமார், செயல் அலுவலர்கள். இளங்கோவன், சுபிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செங்கத்தில் மின்கம்பம் ஏற்றிச் சென்ற டிராக்டர் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து: கூலித் தொழிலாளி பரிதாப பலி; இருவர் படுகாயம்!

செங்கம், மே 17-

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே மின்கம்பங்களை ஏற்றிச் சென்ற டிராக்டர், 6 அடி ஆழப் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கூலித் தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் பலத்த காயமடைந்தனர். செங்கம் மின்வாரிய அலுவலகத்தில் இருந்து புதிய மின்கம்பங்களை நடுவதற்காக, 8 மின்கம்பங்களை ஏற்றிக்கொண்டு டிராக்டர் ஒன்று புறப்பட்டது. பக்கிரிபாளையம் பகுதியில் சென்றபோது, எதிர்பாராதவிதமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த டிராக்டர், அருகில் இருந்த ஆறடி ஆழமுள்ள பள்ளத்தில் தலைகீழாகக் கவிழ்ந்தது. இந்த விபத்தில், டிராக்டரில் மின்கம்பங்களின் மீது அமர்ந்து பயணித்த கூலித் தொழிலாளர்களான தோக்கவாடி பகுதியைச் சேர்ந்த அசோக் (36), திருப்பதி (36) மற்றும் செங்கம் பேட்டை பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (35) ஆகிய மூவரும் மின்கம்பங்களுக்கு இடையே சிக்கிப் படுகாயமடைந்தனர்.









விபத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள், உடனடியாக விரைந்து வந்து தொழிலாளர்கள் மீது கிடந்த மின்கம்பங்களை அகற்றி, அவர்களைப் பத்திரமாக மீட்டனர். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மூவரும் செங்கம் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்ட நிலையில், பலத்த காயமடைந்த அசோக் மேல் சிகிச்சைக்காகத் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால், அங்கு சிகிச்சை பலனின்றி அசோக் பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து செங்கம் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

மின்வாரியத்தில் புதிய மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்) அமைப்பது, மின்கம்பங்கள் நடுவது மற்றும் மின்கம்பிகள் அமைப்பது போன்ற பணிகளை மின்வாரியம் ஒப்பந்ததாரர்கள் மூலமாகவே மேற்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் தங்களுக்கு மின்வாரியத்தில் நிரந்தர அரசு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், ஒவ்வொரு மின்வாரியப் பகுதியிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஒப்பந்ததாரர்களின் கீழ் மிகக் குறைந்த கூலிக்கு, உயிருக்கு ஆபத்தான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்குப் பணி நிரந்தரமோ அல்லது முறையான ஊதியமோ வழங்கப்படுவதில்லை. தங்களின் வாழ்வாதாரத்திற்காகப் பல ஆண்டுகளாகச் சொற்பக் கூலியைப் பெற்றுக்கொண்டு, எந்தவிதப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி ஆபத்தான மின்சாரப் பணிகளை இவர்கள் செய்து வருகின்றனர். மின்வாரியமும், ஒப்பந்ததாரர்களும் இவர்களைக் குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி, அனைத்துப் பணிகளையும் வாங்கிக் கொள்கின்றனர்.

ஆனால், இது போன்ற எதிர்பாராத விபத்துகளின்போதோ, உயிரிழப்பு அல்லது நிரந்தர உடல் ஊனம் ஏற்படும்போதோ மின்வாரியமோ, ஒப்பந்ததாரர்களோ எந்தவிதப் பொறுப்பும் ஏற்பதில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். விபத்தில் சிக்கி வாழ்வாதாரத்தை இழக்கும் தொழிலாளர்கள், தங்களின் எதிர்காலம் கேள்விக்குறியான நிலையில் தவித்து வருகின்றனர். எனவே, பல ஆண்டுகளாக மிகக் குறைந்த ஊதியத்தில் உயிருக்கு ஆபத்தான பணிகளைச் செய்து வரும் இந்த ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு அவர்களுக்கு உரிய விபத்துக் காப்பீடு மற்றும் பணி நிரந்தரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சூரப்பட்டு பகுதியில் மூதாட்டி கொலை இருவர் கைது

மாதவரம், மே 17-

மாதவரம் தொகுதி சூரப்பட்டு பகுதியைச் சேர்ந்த பொன்னம்மாள் (70) என்பவரை ஆட்டோவில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தாக்கியதாகப் பொதுமக்களிடமிருந்து காவல் நிலையத்திற்குத் தகவல் கிடைத்ததின் பேரில் சம்பவ இடத்திற்குச் சென்ற அம்பத்தூர் காவல் துறையினர் விசாரணை செய்தபோது, பொன்னம்மாள் கைகளும் கால்களும் துணியால் கட்டப்பட்ட நிலையில் சடலமாகக் கிடந்துள்ளார். மேலும் வீட்டின் பொருட்கள் சிதறியும், பீரோ மற்றும் அலமாரிகள் திறக்கப்பட்டு அதிலிருந்த பொருட்களும் கலைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக இறந்தவரின் 5வது மகள் கெஜலட்சுமி (45) அளித்த புகாரின் பேரில் டி4 புதூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர், இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக





கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. விசாரணையின் போது, இறந்த பொன்னம்மாளின் கணவர் தாமோதரன் 2006ம் ஆண்டில் இறந்த பிறகு, அவர் சம்பவ இடமான சூரப்பட்டு என்ற விலாசத்தில் தனியாக வசித்து வந்துள்ளார். இவருக்கு 6 மகள்கள் உள்ளனர்; அவர்கள் அனைவரும் திருமணமாகி அவரவர் தனித்தனியே வசித்து வருகின்றனர்.மேலும், இவர் தனது குடும்ப சொத்தினை விற்பதற்கு ஏற்பாடு செய்து ரூ.31 லட்சம் முன்பணமாக பெற்று தனது 6 மகள்களுக்கும் தலா 5 லட்சம் வீதம் பிரித்து கொடுத்துவிட்டு, மீதமுள்ள 1 லட்சம் ரூபாயை வைத்திருந்துள்ளார் என தெரியவருகிறது. ஆட்டோவில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து, சுமார் 20.45 மணியளவில் அங்கிருந்து வெளியேறியது தெரியவந்தது. கண்காணிப்பு கேமரா பதிவுகளின் அடிப்படையில் சூரப்பட்டை சேர்ந்த பழனி (எ), செல்வம் (எ) காஜாமொய்தீன் (எ) மாதவன் (44) மற்றும் வியாசர்பாடியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரான துளசிதாஸ் (51) இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணையில் சூரப்பட்டை சேர்ந்த சேர்ந்த பழனி (எ), செல்வம் (எ) காஜாமொய்தீன் (எ) மாதவன், கொலையுண்ட பொன்னம்மாள் இருவரும் ஒரே பகுதியில் வசித்து வந்துள்ளனர். பொன்னம்மாள் தனது நிலத்தை விற்பதற்கு எதிரி பழனி இடைத்தரகராக செயல்பட்டு வந்துள்ளார். இதனால் பொன்னம்மாள் நிலத்திற்காக முன்பணம் பெற்றது பழனிக்கு தெரிய வந்துள்ளது. பணம் வீட்டில் இருக்கும் என்றும், மொத்த பணத்தையும் கொள்ளையடித்து விட்டால் தனது வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடலாம் என்ற எண்ணத்தில் தனது நண்பரான வியாசர்பாடியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் துளசிதாசுடன் சேர்ந்து இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது. நிலத்தினை வாங்க இருந்தவர் முன்பணத்தினை பொன்னம்மாளின் 6 மகள்களுக்கு தலா ரூ.5 லட்சம் வீதமும், பொன்னம்மாளுக்கு ரூ.1 லட்சத்தையும் வங்கி மூலம் செலுத்தியுள்ளார்.

இதனையறியாமல் பழனி பணம் முழுவதும் வீட்டில் இருப்பதாக நினைத்து வீட்டிற்கு வந்து பொன்னம்மாளை கொலை செய்து விட்டு, பணம் இல்லாததால் அவர் அணிந்திருந்த வளையல் மற்றும் கம்மல்களை எடுத்துக்கொண்டு தப்பியுள்ளனர். களவு போன பொருட்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

# தாய் இல்லத்தில் மதிய உணவு வழங்கிய தமிழக வெற்றி கழக மகளிர் அணி



சிவகங்கை மே,17-

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் முதலமைச்சரானதையும், சிவகங்கை தொகுதியில் குழந்தை ராணி நாச்சியார் விலிகி வெற்றி பெற்றதையும் முன்னிட்டு, சிவகங்கை மேலூர் ரோட்டில் உள்ள தாய் இல்லத்தில் நகர மகளிர் அணி சார்பில் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஷி. தாமரை பாண்டியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தமிழரசி பிரதீப், தெற்கு ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் ஸி. லதா, தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் அகிலா மற்றும் நகர மகளிர் அணி இணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை நகர மகளிர் அமைப்பாளர் ஸி. ராஜேஸ்வரி ஒருங்கிணைத்தார்.

# தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடுவோருக்கு நிதி உதவி வழங்கிட CITU சிவகங்கை மாவட்ட குழு அழைப்பு

சிவகங்கை மே,17-

டெல்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாநிலங்களின் முக்கிய தொழில் மையங்களில், உழைப்பு சுரண்டலுக்கு எதிராக போராடி வரும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிதி உதவி வழங்குமாறு இந்திய தொழிற்சங்க மையம் (சிமிஜிஹி) சிவகங்கை மாவட்ட குழு பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. சிஜடியு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: பீகாரின் பரூனி, ஹரியானாவின் பானிபட், மானேசர், பரிதாபாத், குஜராத்தின் சூரத், உத்தரபிரதேசத்தின் நொய்டா, கிரேட்டர் நொய்டா, குருகிராம் உள்ளிட்ட முக்கிய தொழில் நகரங்களில் தொழிலாளர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 14 ஆண்டுகளாக ஊதியஉயர்வு வழங்கப்படாததையும், 8 மணி நேர வேலை நேரத்தை அதிகரிக்கும் முயற்சியையும் கண்டித்தும் இந்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாதாந்திர குறைந்தபட்ச ஊதியமாக ரூ.20,000 வழங்க வேண்டும், சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரத்தை அதிகரிக்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராடி வரும் தொழிலாளர்கள் மீது பாஜக ஆட்சி மாநில அரசுகள் அடக்குமுறைகளை மேற்கொண்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. உத்தரபிரதேசத்தில் போராடும் தொழிலாளர்கள் மீது ‘நகர்ப்புற நக்சலைட்டுகள்’, ‘பாகிஸ்தான் சதியாளர்கள்’ போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும், 1200க்கும் மேற்பட்ட காவல்துறையினரை களமிறக்கி தடியடி நடத்தப்பட்டதோடு, 400க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல முக்கிய தொழிற்சங்க தலைவர்கள் வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.மேலும், தொழிற்சாலைகளில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக சிஜடியு சுட்டிக்காட்டியுள்ளது. சத்தீஸ்கரில் வேதாந்தா நிறுவனத்தின் சிங்கிதாரா அனல் மின் நிலையத்தில் உயர் அழுத்த நீராவிக் குழாய் வெடித்த விபத்தில் 20 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் 15 பேர் காயமடைந்ததாகவும், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் அங்கு 296 தொழிலக விபத்துகள் நிகழ்ந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேபோல், தெலுங்கானாவில் 2025 ஜூலை மாதம் சிகாச்சி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 44 பேர் உயிரிழந்ததாகவும், நாடு முழுவதும் 2018 முதல் 2020 வரை 3331 தொழிலக விபத்துகள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.திய அரசு கொண்டுவந்துள்ள நான்கு தொழிலாளர் தொகுப்புச் சட்டங்கள் (Labour Codes), தொழிலாளர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பதிலாக அவர்களின் வாழ்வாதாரத்தையும் பணிப்பாதுகாப்பையும் மேலும்பாதிக்கும் வகையில் உள்ளதாக சிஜடியு குற்றம்சாட்டியுள்ளது. நியாயமான ஊதியம், 8 மணி நேர வேலை உரிமை மற்றும் பாதுகாப்பான பணிச்சூழல் ஆகியவற்றிற்காகப் போராடி வரும் தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்கி, ஒற்றுமையுடன் ஆதரவளிக்குமாறு சிஜடியு சிவகங்கை மாவட்ட குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.



■ மதுரை ரயில் நிலையம் எதிரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இராணி மங்கம்மாள் சத்திரம் இடிக்கப்படுவதை நிறுத்தக் கோரி மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் அனைத்து நாயுடு சங்கங்களின் சார்பாக வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அருகில் நடைபெற்றது.. ஆர்ப்பாட்டத்தில் முக்கிய கோரிக்கைகளாக ராணி மங்கம்மாள் அன்ன சத்திரத்தை மீண்டும் பழமை மாறாமல் புதுப்பித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மற்றும் பயணிகளின் விடுதியாக செயல்பட வேண்டும். வரலாற்று சின்னங்களை பாதுகாக்க வேண்டும் என்ன பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் பாலமுருகன் ஜெயபாலன் ஜெகநாதன் சீனிவாசன் மகாராஜன் அழகர்சாமி பாரத் பாஸ்கரன் செந்தில் கிருஷ்ணராஜ் நாகராஜ் ஹேமா காளிதாஸ் மற்றும் பல்வேறு சங்க மூத்த நிர்வாகிகள் இளைஞர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சார் தாம் யாத்திரை 1 மாதத்தில் 12 லட்சம் பக்தர்கள் தரிசனம்

டேராடூன்: மே,17-

உத்தராகண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள புனிதத் தலங்களான பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி ஆகிய சார் தாம் ஆலயங்களுக்கு இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. நடை திறக்கப்பட்ட ஒரே மாதத்திற்குள் 12.62 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.தற்போது நாளொன்றுக்கு சுமார் 70,000 முதல் 80,000 பக்தர்கள் மலைக் கோயில்களுக்கு வருகை



தருகின்றனர். இந்த யாத்திரையின் போது இதுவரை 40 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். இவை அனைத்தும் மாரடைப்பு உள்ளிட்ட காரணங்களால் நிகழ்ந்தவை. இந்த ஆண்டு முதல் முறையாக பத்ரிநாத், கேதார்நாத் மற்றும் கங்கோத்ரி ஆகிய 3 ஆலயங்களுக்குள் இந்துக்கள் அல்லாதோர் நுழைவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மாற்று மதத்தினர் ஆலயத்திற்குள் நுழைய விரும்பினால், அவர்கள் சனாதன தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் என பத்ரிநாத்கேதார்நாத் கோயில் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.கடந்த ஆண்டு சார் தாம் யாத்திரையில் மொத்தம் 50 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்ச்சைக்குரிய போஜ்சாலா வளாகம் சரஸ்வதி தேவிக்கான கோயில்தான்

## மத்திய பிரதேச உயர் நீதிமன்ற அமர்வு தீர்ப்பு

போபால்:மே,17-

மத்திய பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் 11ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட போஜ்சாலா வளாகம் உள்ளது. இது சரஸ்வதி தேவி கோயில் என்று இந்துக்கள் வாதிடுகின்றனர். அதேசமயம் அது கமல் மவுலா மசூதி என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். இதனால் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து அங்கு கடந்த 2003ல் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு தரப்பினரையும் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் வழிபட ஏஎஸ்ஐ அனுமதி அளித்தது.இதுதொடர்பான வழக்கில் ம.பி. உயர் நீதிமன்ற நீதிபதிகள் விஜய் குமார் சுக்லா, அலோக் அவஸ்தி ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பு அளித்தது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியிருப்பதாவது: வரலாற்று இலக்கியங்களும் ஆவணங்களும், சர்ச்சைக்குரிய பகுதியின் இயல்பு பார்மர் வம்சத்தை சேர்ந்த மன்னர் போஜருடன் தொடர்புடைய ஒரு சமஸ்கிருத கற்றல் மையமான போஜசாலையாகவே இருந்ததை நிலைநாட்டுகின்றன.மேலும் போஜர் காலத்துடன் தொடர்புடைய பல்வேறு இலக்கிய மற்றும் கட்டிடக்கலை குறிப்புகள், அங்கு சரஸ்வதி தேவி கோயில் இருந்ததை சுட்டிக்காட்டுகின்றன. எனவே, அது சரஸ்வதி கோயில்தான். லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள சரஸ்வதி தேவி சிலையை மீட்டு கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மசூதி கட்டுவதற்கு வேறு நிலம் ஒதுக்க மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.இந்த தீர்ப்பு குறித்து வழக்கறிஞர் விஷ்ணு சங்கர் ஜெயின் கூறுகையில், ‘‘ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வந்துள்ளது. இந்து தரப்பினருக்கு வழிபடும் உரிமையை நீதிமன்றம் வழங்கியுள்ளது. இனிமேல், அங்கு இந்து வழிபாடு மட்டுமே நடைபெறும்’’ என்றார்.இந்த தீர்ப்பை தொடர்ந்து தார் மாவட்டத்தில் காவல்துறை பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. மக்கள் அமைதி காக்க வேண்டும், வதந்தி அல்லது தவறான தகவல்களை பரப்புவதை தவிர்க்க வேண்டும் என தார் மாவட்ட ஆட்சியர் ராஜீவ் ரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.






■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,12ம் ஆம் பொதுத்தேர்வில் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் மதுரை மாவட்ட அளவில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மூன்று மாணவிகளுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வழங்கினார்.

# சட்டவிரோத மது விற்பனையை தடுக்க தவறியதாக திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

சென்னை: மே,17-

திருவொற்றியூர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக இருப்பவர் அலெக்ஸ். இவர் விடுப்பில் சென்றதால் அக்காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் மோகன் தாஸ், கூடுதல் பொறுப்பாகச் சட்டம் ஒழுங்கு பணிகளைக் கவனித்து வந்தார்.இந்தச் சூழலில் திருவொற்றியூர் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னரும் (மதியம் 12 மணி), அனுமதிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டியும் (இரவு 10 மணி) சட்ட




விரோதமாக மது விற்பனை நடைபெறுவதாகப் புகார்கள் எழுந்தன.இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அண்மையில் வைரலானது. சென்னையில் சட்டவிரோத மது விற்பனையை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தார்.இந்நிலையில் தன் பொறுப்பில் இருந்த பகுதியில் கள்ளச்சந்தை மது விற்பனையைத் தடுக்கத் தவறிய காவல் ஆய்வாளர் மோகன்தாஸை பணியிடை நீக்கம் செய்து காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.“இது போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் குண்டர் சட்டத்தில் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.சட்டவிரோத மது விற்பனையை தடுக்கத் தவறும் காவல் துறையினர் மீதும் பாரபட்சம் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என காவல் ஆணையர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை தாக்கிய பெண் டிஜஜி

## விசாரணை நடத்தி அறிக்கை தர உத்தரவு

சென்னை: மே,17-

சென்னையில் இயங்கி வரும் ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை பெண் டிஜஜி தாக்கியதாகக் கூறப்படும் விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.தமிழக காவல் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அதில் முக்கியமான பிரிவுகளில் ஒன்று ஆயுதப்படை. கலவரம், அசாதாரண சூழல் அல்லது வன்முறை ஏற்படும் நேரங்களில் அவற்றை ஒடுக்க இந்த படை பயன்படுத்தப்படுகிறது.மேலும், விஜபிக்கள் வருகை, திருவிழாக்கள், பண்டிகைகள் மற்றும் பெரிய பொதுக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், கைதிகளை சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லுதல், சட்டம்ஒழுங்கு பணியில் போலீஸாருக்கு உதவியாக செயல்படுதல் உட்பட பல்வேறு பணிகளை ஆயுதப்படை



பிரிவு போலீஸார் மேற்கொள்கின்றனர். இப்பிரிவின் தலைமை அலுவலகம் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளது.இங்கு டிஜஜியாக பெண் ஐபிஎஸ் அதிகாரி ஒருவர் உள்ளார். அவர் மன அழுத்தத்துக்கு சிகிச்சை பெற்றதாக கூறப்படுகிறது. மேலும் உடல் நலமும் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவரை போலீஸ் உயர் அதிகாரிகள் மிக முக்கியப் பணிகளில் அமர்த்தாமல் ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்ற அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.கோப்புகளை வீசிஇவர் பணியில் இருந்தபோது, கோப்பில் கையெழுத்து வாங்க வந்த அலுவலக ஆண் உதவியாளர் (அமைச்சுப் பணியாளர்) ஒருவரது செயல் பெண் டிஜஜிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதாம். இதனால், கோபம் அடைந்த பெண் டிஜஜி, அலுவலக உதவியாளர் மீது கோப்புகளை வீசி எறிந்ததாகவும், காலணியால் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து அந்த அலுவலக உதவியாளர் அவரது சங்க நிர்வாகிகளிடம் முறையிட்டுள்ளார். இந்நிலையில் சம்பந்தப்பட்ட பெண் ஐபிஎஸ் அதிகாரி, டிஜிபியிடம் இந்த விவகாரம் தொடர்பாக மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய டிஜிபி மற்றும் சென்னை காவல் ஆணையர் தனித் தனியாக உத்தரவிட்டுள்ளனர். இதை அடிப்படையாக வைத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

# இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரையுடன் கலந்துரையாடிய சிவகங்கை மாணவர்கள்

சிவகங்கை மே,17-

திருச்சியில் நடைபெற்ற நல்லோர் வட்ட சாதனையாளர்கள் நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் இலக்கியத் துறைகளில் சாதனை புரிந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களின் பங்கேற்பு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. நிகழ்ச்சியில் மாணவர்கள் தங்களது திறமைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை விளக்கிக் கூறினர். ‘செம்மை சிலம்பம் குழு’ மாணவர்களின் இரட்டைக் கம்பு சிலம்பாட்டம், மாணவியர் தனலட்சுமி மற்றும் செந்தாமரையின் யோகா நிகழ்ச்சி, கார்த்திகேயனின் செல்ஃப் ரீசார்ஜிங் பைக், சுகுமாரின் ரோபோ



விவசாயி உள்ளிட்டவை பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன. சிவகங்கை மாவட்டம் அரியக்குடி மாணவர்களின் ‘விஹோ சாட்டிலைட்’ திட்டம், கோட்டையூர் அருணாச்சலம் செட்டியார் பள்ளி மாணவர் கார்த்திகேயனின் ‘ஸ்மார்ட் மரம்’ கண்டுபிடிப்பு மற்றும் தேவகோட்டை டி பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி மாணவர் பரந்தாமனின் சிறப்பான பேச்சு ஆகியவை மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.மேலும், நல்லோர் வட்டத்தின் மாநில வழிகாட்டி அன்பு நடத்திய ‘நான் யார்’ கலந்துரையாடல் மாணவர்களை சிந்திக்க வைத்தது. மாணவர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ‘பீம் பேக்’ விளையாட்டு நடத்தப்பட்டது. தொடர்ந்து, இந்திய அரசியலமைப்பு சாசன முகப்புரை பற்றிய விளக்கமும் வழங்கப்பட்டது. எஸ்.எம்.என்.ஜி நிறுவனர் அப்துல் ஹக்கீம் மற்றும் ஜி.எம் ட்ரோன்ஸ் நிறுவனர் சோலையப்பன் ஆகியோர் ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர். நல்லோர் வட்ட மாநில பொறுப்பாளர் பாலு நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். திருச்சி பனானா லீஃப் ஹோட்டல் உரிமையாளர் மனோகரன் மற்றும் சென்னை மாணிக்க மாணவர் துறை பொறுப்பாளர் ஓவிய சேனா வாழ்த்துரை வழங்கினர்.நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 20 மாணவர்கள் நல்லோர் வட்டத்தில் இணைந்து செயல்பட உள்ளதாக தெரிவித்தனர். மாணவர்கள் விஷ்ணு மற்றும் கேசவ பிரியன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

முன்னதாக, இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இணைய வழியில் மாணவர்களுடன் கலந்துரையாடி அறிவியல் ஆர்வத்தை ஊக்குவித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161